**கடுகண்ணாவ நகர சபை - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடுகண்ணாவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுகண்ணாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனக்கு தவி

### 1.6 நிதிக்கூற்றுகள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செயல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்த 02 அபிவிருத்தி திட்டங்களுக்கு உரிய மொத்தம் ரூபா 476,680 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அத்தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீளாய்வாண்டுக்குரிய காணி வரி ரூபா 3,135,142 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது பிரதிபலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் முற்பண கணக்கு மீதி மற்றும் அதற்குரிய பேரேட்டு கணக்கு மீதியுடன் ஒப்பிடும்போது ரூபா 195,256 ஆன இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | 2025 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது பிரதிபலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிதி கூற்றுகளில் காண்பிக்கப்படும் மீதிகள் உரிய பேரெட்டு கணக்கு மீதிகள் உடன் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்** | | | |
| (i) | 2021 ஜூலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை / பிரமாணங்களின் VI ஆம் பகுதியின் 84 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 262 கட்டிடங்களுக்காக இனக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது எழுத்து மூலம் கடிதங்கள் மூலம் உரியவர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாக. | குடியிருப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள கட்டிடங்களுக்காக இணக்க சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு திருத்தமாக வெளியிடப் பட்ட 2235/54 ஆம் இலக்க 2021 யூலை 08 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் 28 ஆம் பிரிவு | அவ்விருத்தி அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் 37 நிர்மாணங்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. | பின் தொடர் நடவடிக்கைகள் பின்னர் எதிர்வரும் அவர்களுக்கு மேற்கொள்வதாக. | அத்துமீறிய நிர்மாணங்களுக்கா க சட்டரீதியாக செயல்படுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2014 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான காலப் பகுதிக்குரிய காலா வதியான ரூபா 532,332 ஆன காலா வதியான 32 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,135,635 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 6,308,331 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,253,000 | 14,692,342 | 13,431,486 | 8,649,187 | 8,970,000 | 8,757,940 | 7,974,720 | 7,388,331 |
| (ii) | வாடகை | 5,650,000 | 5,660,042 | 5,891,680 | 1,954,843 | 6,370,000 | 6,049,802 | 5,275,832 | 2,186,481 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 915,200 | 781,748 | 781,748 | 27,500 | 750,200 | 679,593 | 679,593 | 27,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,785,000 | 12,968,687 | 11,138,568 | 10,050,655 | 14,345,000 | 11,543,200 | 16,301,441 | 8,220,536 |
| | | 34,603,200 | 34,102,819 | 31,243,482 | 20,682,185 | 30,435,200 | 27,030,535 | 30,231,586 | 17,822,848 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 8,564,227 ஆக இருந்ததுடன் அந்நிலுவையில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 52 தனியார் ஆதனங்களிலிருந்து ரூபா 862,997 தொகையான நிலுவை காணப்பட்டது. நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 171 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின இறுதித் திகதியில் உள்ளவாறு 40 அரச நிறுவனங்களிலிருந்து ரூபா 1,040,431 தொகையான வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| **(ஆ)** | **வாடகை** | | |
| **(i)** | **கடை வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தடைவாடகை நிலுவை ரூபா 1,292,268 ஆக இருந்தது இம்மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 332,127 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக. | - மேற்படி - |
| (ii) | **வீட்டு வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திரையில் உள்ளவாறு காணப்பட்ட ஆறு வாடகை விட்டு நபர்களிடமிருந்து ரூபா 254,000 ஆன வீட்டுக்குள் மீது ஒன்று 2019 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அற விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 10,249 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 8,137,005 ஆக இருந்தது. | ரேவு செய்வதற்கும் 2025 ஆம் ஆண்டின் போது அற விடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| **(i)** | **அறிவித்தல் பதாதைகள்**<br><br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,483,517 நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவையில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை காணப்படுகின்ற 33 நிறுவனங்களிலிருந்து ரூபா 1,303,525 கூட்டுத்தொகை அறவிட வேண்டியிருந்தது. | ரேவு செய்வதற்கும் 2025 ஆம் ஆண்டின் போது அற விடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | **வாடி வீட்டு கட்டணம்**<br>05 ஆண்டுகளாக காணப்படும் ரூபா .243,750 ஆன வாடிவீட்டு கட்டணம் ஒன்று அறுவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**(iii) கழிவுப்பொருள் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 419,889 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 5000 இற்கு மேற்பட்ட நிலுவையான 28 நிறுவனங்களிடம் இருந்து ரூபா 303,034 தொகை அறவிடப்பட வேண்டிய மீதியாக இருந்தது | - மேற்படி - - | - மேற்படி - - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் புகையிரத திணைக்களத்திற்குரிய கட்டிடம் ஒன்று குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது முறையற்ற வகையில் புகையிரத திணைக்களத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,360,800 தொகையை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு 2023 ஜூன் 05 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 462,530 தொகை மீளாய் வாண்டின் இறுதி தேதி வரையிலும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை தீர்வு செய்வதாக | ஓய்வூதிய பங்களிப்பு தொகை கொடுப்பனவு் செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 .ல் உள்ளவாறு பெறவேண்டிய கழிவுப்பொருள் கடன் பட்டோர் மீதி ரூபா 419,889 ஆக இருந்தது. அதில் 01 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய ரூபா 139,530 ஆன மீதியும் இருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 1987 செப்டம்பர் 30 ஆம் திகதிய 05/1/119 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலீட்டு கணக்கில் உள்ள பணத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விசாரித்து பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்தம் ரூபா 1,546,085 ஆன மீதியில் | எதிர்காலத்தில் அபிவிருத்தி செயற்கிட்டங்களுக்காக ஈடுபடுத்துவதாக. | மிகைத்தொகை பிரதேச அபுவத்திற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

எவ்வித தொகையும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் ரூபா 16,965,000 கூட்டுப் பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் பெறுமதி கண்டுபிடிக்க முடியாத உழவு இயந்திர டேலர் ஒன்று மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த கல் ரோல் ஒன்று என்பன 03 ஆண்டுகள் முதல் 7 இற்கு இடைப்பட்ட காலமாக விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | உள்ளுராட்சிமன்ற திணைக்களத்திற்கு கடிதமு மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 162,791,750 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் தீயணைப்பு வண்டியின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. கை எடுப்பதற்கு நடவடி தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக சொத்துக்கள் இல்லை. | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 14 பதவிகளில் 24 வெற்றிடங்களும் பதவியொன்றில் 17 மிகைகளும் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டியதுடன் மிகை ஊழியர்கள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2019 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சேவையை விட்டுச் சென்ற சேவையில் இருந்து கேட்டு விலகிய ஓய்வு பெற்ற வெளிநாடு சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் மரணித்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் ரூபா 662,966 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 04 வாகனங்களின் மைலோமானி செயற்படாத காரணத்தினால் 2023 திசெம்பர் முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 2,762 லீட்டர் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட ரூபா 857,896 தொகை தொடர்பில் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாமல் போனது. | மயிலோ மானியை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | மயிலோ மானி திருத்தம் செய்யப்பட வேண்டும். |